செய்தி வெளியீடு எண் :30 நாள் :23.12.2020

**தேனி மாவட்டம்**
**அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள்**
**கொரோனா வைரஸ் (COVID-19) தடுப்பு பணிகள் தொடர்பாக,**
**பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**தலைமையில் நடைபெற்றது:-**

******

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த அலுவலக வளாகத்தில் இன்று (23.12.2020) அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் கொரோனா வைரஸ் (COVID-19) தடுப்பு பணிகள் தொடர்பாக, பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) தாக்கத்தினை கட்டுப்படுத்திட அரசால் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு, தற்போது தமிழகம் முழுவதும் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், பொதுமக்களின் நலன் கருதி அரசு பல்வேறு தளர்வுகளை அறிவித்து, நடைமுறைப்படுத்தி வருகிறது. அதில் ஒரு பகுதியாக கல்லூரி மாணவ, மாணவியர்கள் கல்லூரிகளுக்கு சென்று பயிலுவதற்கு ஏதுவாக கட்டுப்பாடுகளுடன் கூடிய அனுமதியினை அரசு வழங்கியதன் அடிப்படையில் தற்போது கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளது.

அதன்படி, தேனி மாவட்டத்தில் திறக்கப்பட்டுள்ள அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து முன்னதாக கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து, கல்லூரி நிறுவனங்களைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் முதல்வர்கள் ஆகியோர்களுடன் இன்றைய தினம் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்றினை கட்டுப்படுத்திட அனைத்துத்துறை அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டதன் அடிப்படையில், வெகுவாக கொரோனா நோய் தொற்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, அரசு அனுமதியின்படி, திறக்கப்பட்டுள்ள கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர்களின் நலனை கருத்தில் கொண்டு, அரசால் வகுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை சரிவர கடைபிடித்திட வேண்டும்.

அதன்படி, அனைத்து கல்லூரிகளிலும் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் இடங்களில் கண்டிப்பாக தெர்மா கருவியின் மூலம் வெப்பநிலை பரிசோதனை மேற்கொண்டு, கை கழுவு திரவம் கொண்டு நன்கு கைகழுவிய பின்பு அனுமதிக்க வேண்டும். குறிப்பாக மாணவ, மாணவியர்கள் முககவசம் அணிந்து வருவதை உறுதி செய்திட வேண்டும். கல்லூரிகளின் வளாகத்தினுள் ஒரே இடத்தில் மாணவ, மாணவியர்கள் கூடுவதை தவிர்த்திட வேண்டும்.

அனைத்து கல்வி நிறுவனங்களிலும் கோவிட்-19 தொடர்பாக அவசரகால எண் மற்றும் உதவி மைய எண் என தனி தொலைபேசி இணைப்புகள் உருவகாக்கப்பட்டு, அதன் விபரங்களை அறிவிப்பு பலகையில் காட்டப்பட வேண்டும். தினந்தோறும் இரண்டு வேளை நேரங்களில் வகுப்பு மற்றும் அலுவலக அறைகள், கற்பித்தலுக்கான அனைத்து பொருட்களையும் கிருமி நாசினி தெளித்து, சுற்றுப்புறங்களை சுகாதாரமாக வைத்துக் கொள்ள வேண்டும். வெவ்வேறு பகுதிகளில் இருந்து வரும் அனைத்து மாணவர்களும் வகுப்பில் கலந்துகொள்ள அனுமதியளிப்பதற்கு எதிர்மறை சோதனை அறிக்கை இருந்தாலும் 14 நாட்கள் தனிமைப்படுத்தபட வேண்டும். அறிகுறி தென்படுபவர்களை உடனடியாக அரசு மருத்துவமனை அல்லது அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளுக்கு அழைத்து செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வகுப்பறைகள், ஆய்வகங்கள், உணவு கூடங்கள், அரங்குகள், பொதுவான அறைகள் மற்றும் விளையாடும் பகுதிகளில் சமூக இடைவெளிக்கான (6 அடி) தூரத்தை கருத்தில் கொண்டு, சமூக இடைவெளியினை மாணவ, மாணவியர்கள் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். மேலும், இருக்கைகள் குறைந்தபட்சம் இரண்டு இடங்களுக்கிடையில் காலியாக இருக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும். வளாகங்களில் தூய்மைப்பணி சரியாக பராமரிக்கப்பட வேண்டும். கை கழுவுவதற்கான ஏற்பாடுகள் பல்வேறு இடங்களில் போதுமான அளவு தண்ணீர் மற்றும் திரவ சோப்புடன் வழங்கப்பட வேண்டும். சரியான காற்றோட்டம் அனைத்து அறைகளிலும் கையாளப்படவும் வேண்டும். ஏ.சி அறைகளை தவிர்த்திட வேண்டும்.

சமையலறை, உணவு கூடங்கள், குளியலறைகள், மற்றும் கழிப்பறைகளில் சுகாதார நிலைமைகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். சமையலறை ஊழியர்கள் கண்டிப்பாக முககவசம் மற்றும் கையுறைகளை அணிய வேண்டும். ஒவ்வொரு பயணங்களுக்கும் இடையிலும் கல்லூரி பேருந்துகளில் தொடர்ந்து கிருமி நாசினி தெளிக்கப்பட வேண்டும். ஓட்டுனர், வாகன சீராளர் மற்றும் மாணவர்கள் அனைவரும் பேருந்துக்குள் கண்டிப்பாக முககவசம் அணிந்திருக்க வேண்டும். கோவிட்-19 கட்டுப்பாட்டு மண்டலத்திற்குள் உள்ள கல்லூரிகள் கண்டிப்பாக திறக்கப்படக்கூடாது. கொரோனா அறிகுறிகள் உள்ள நபர்களையும் கல்லூரிகளின் வளாகத்திற்குள் அனுமதிக்கக்கூடாது.

மேலும், கொரோனா நோய் தொற்றினை தடுப்பதற்கு ஏதுவாக, அரசால் தொடர்ந்து பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் தாக்கம் குறித்து மாணவ, மாணவியர்களிடையே ஆசிரியர்கள் தொடர்ந்து எடுத்துரைத்து, அவர்களை சார்ந்தோர்களிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், உதவி ஆட்சியர் (பயிற்சி) ஞ.தாக்ரே சுபம், இ.ஆ.ப., துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு. எஸ்.செந்தில்குமார், அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களை சார்ந்த நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**